DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | **:** | **O.S.74/2025** |
| **Deposition of witness for** | **:** | **Plaintiff** |
| **Serial No. of Witness** | **:** | **PW1** |
| **Name** | **:** | நம்பி |
| **Father's Name** | **:** | ஆறுமுகம் |
| **Village** | **:** | இளைய நயினார் குளம் |
| **Taluk** | **:** | நாங்குநேரி |
| **Age** | **:** | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 17.02.2026

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. வாதி பெயரில் உள்ள கதவு எண் 2/ஏ க்கான வீட்டு வரி ரசீதுகள் (எண்ணம் 3) **வா.சா.ஆ 1**. பட்டா ரத்து செய்தது தொடர்பான சார்ஆட்சியர் சேரன்மகாதேவி அவர்களால் 26.04.2025 நாளிட்ட குறிப்பாணை **வா.சா.ஆ 2**. 16.04.2025 நாளிட்ட வாதி வள்ளியூர் சார்பதிவு அலுவலருக்கு கொடுத்த தடங்கல் மனு கைநகல் **வா.சா.ஆ 3**. 29.04.2025 நாளிட்ட 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்தி கொடுத்த வள்ளியூர் சார்பதிவாளர் ஆவண எண் 1867/2025 செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 4**. தபசில் சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் **வா.சா.ஆ 5**. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.